பி. டி. சி. பஸ்ஸிலே நானும் எனது கட்சித் தலைவரும் வந்தோம். மதுரையிலிருந்து பல்லாவரம் வரையிலே மழை இருந்தது. நனைந்துகொண்டே தான் வந்தோம், பல்லாவரத்திலே மழையில்லை, ஆனால் பல்லாவரத்திலே பஸ் ஓடாமல் நின்றுவிட்டது, அதற்குப் பிறகு வேறு பஸ்ஸிலே தான் வந்தோம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அதைப்பற்றி வாக்குறுதி தந்த பிறகு நேரத்தை தாங்கள் வீணாக்க வேண்டாம்.

திரு. கே. கந்தசாமி: நேரத்தின் புனிதத் தன்மையை உணர்ந்துதான் சொல்கிறேன், ஆனால் வேதனையோடு சொல்கிறேன், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே பணியை ஆற்ற முடியாத நிலைமையிலே அன்றைக்கு பூராவும் தலைவலி இருந்தது, மறுநாளும் தலைவலி இருந்தது. சட்டமன்ற நடவடிக்கைகளில் நாங்கள் சுறுசுறுப்பாக ஈடுபடுவதற்கு நம்முடைய பஸ்களின் சௌகரியக் குறைவு இடையூறாக இருப்பதால் சபாநாயகர் அவர்களும் எங்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும், அவை முன்னவரவர்களும் இப்படிப்பட்ட இடையூறு வரும்பொழுது......

[முற்பகல் 9-50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய அபிப்பிராயத்தை எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து விட்டீர்கள். நடந்த நிகழ்ச்சியை இழுத்துக் கொண்டே போனால் என்ன அர்த்தம்?

திரு. கே. கந்தசாமி: இனிமேல் அப்படி ஏற்படாமல் இருக்கப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லோருக்கும் தெரிந்தாகிவிட்டது, அமைச்சருக்கும் தெரிந்தாகிவிட்டது, நடவடிக்கை எடுப்பார்கள், நீங்கள் உட்காருங்கள்.

சிதம்பரம் வட்டத்தில் சாலைப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு.

*வினா எண் 144— திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் சி. முட்லூர் முதல் கிள்ளை வரை உள்ள நெடுஞ்சாலையில் வீடு கட்டியுள்ள விவசாய மக்கள் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மாற்று மனை கொடுக்கப்பட்டுள்ளதா?

[1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) ஆக்கிரமிப்பாளர்கள் எவரும் அகற்றப்படவில்லை.

(ஆ) இதனுல் மாற்று மனை வழங்க வேண்டிய அவசியமும் எழவில்லை.

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, சிதம்பரம் வட்டம் சி. முட்லூர் முதல் கிள்ளை வரை உள்ள நெடுஞ் சாலையில் ஏழை மக்கள், விவசாய மக்கள் வீடு கட்டி வந்துள்ளார் கள். சென்ற ஆண்டு அதை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து, இப்பொழுது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுத்தால் மாற்று மனைகள் கொடுத்து அவர்களை அப்புறப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே 15-3-1976 ஆம் தேதி அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அரசு நோட்டீஸ் கொடுத்தது. ஆனல் ஆக்கிரமிப்பாளர்கள் அந்த இடங்களிலிருந்து நகர மறுத்ததன் காரணத்தால் மேற்கொண்டு மறுபடியும் ஒரு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அப்பொழுது, ஓராண்டு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிருர்கள். அதன் அடிப்படையில் அகற்றப்பட இருக்கிருர்கள். ஓராண்டுக் காலம் கழித்து மாற்று மனைகள் கொடுப்பது பற்றியும் பரிசீலிக்கப் படும்.

சக்கரக்கோட்டை கண்மாய்.

*வினு எண் 145.— திரு. த. இராமசாமி: மாண்புமிகு வேளாண்மை' பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுககு விடையளிப்பாரா:—

(அ) இராமநாதபுரத்தில் உள்ள சக்கரக்கோட்டை கண்மாய் 'வைகை' பாசனத்தில் இணைக்கப்படாததால் அந்தக் கண்மாயை நம்பியுள்ள 8 ஆயிரம் ஏக்கர் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) 'வைகை' பாசனத்தில் இக் கண்மாயைச் சேர்த்து நிரந்தரமாக விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) சக்கரக்கோட்டை கண்மாயின் பாசனப்பரப்பு நிலம் 1679.32 ஏக்கர் ஆகும். 8,000 ஏக்கர் சக்கரக்கோட்டை கண்மாயின் பாசனப் பரப்பில் இல்லை. இராமநாதபுரம் தென் கலிங்கின் மூலம் மூன்று நாட்களுக்கு 25 மில்லியன் கன அடி தண்ணீர் இப்பாசனத் திற்கு இவ்வாண்டு விடப்பட்டது.

(ஆ) வைகை அணையில் உள்ள நீர் அதன் பாசன ஆயக் கட்டுகளுக்கே போதுமானதாக இல்லை. இருந்தாலும் வைகை சீரமைப்புத் திட்டம் வேலை முடிந்த பின் இது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.